## 30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :323/2009 பொருள் எண்.15

### வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

திரு. ப்பி. கருணாகரன் என்பவர் சென்னை மாநகராட்சி வருவாய்த் துறையில் கூடுதல் வருவாய் அலுவலராகப் பணிபுரிந்தார். இவர் 12.04.1973ல் இளநிலை உதவியாளராக (LDC) சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில்12.04.1973 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 06.07.1973ல் உதவியாளராக (UDC) பதவி உயர்வு அளிக்கப்பட்டு 06.07.1973 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பின்னர் 11.02.1988ல் உரிமம் ஆய்வாளராகவும், 08.09.1994ல் வரிமதிப்பீட்டாளராகவும், 05.04.2004ல் உதவி வருவாய் அலுவலராகவும் ,4.9.2008ல் கூடுதல் வருவாய் அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்தார். இவரது பணிகள் உரிமம் ஆய்வாளர் பதவியில் 11.2.88 முதலும் வரிமதிப்பீட்டாளர் பதவியில் 08.09.1994 முதலும், உதவி வருவாய் அலுவலர் பதவியில் 05.04.2004 முதலும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

இவர் பணிபுரிந்த மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் அவர்களிடமிருந்து தனியர் மீது யாதொரு விசாரணையும் நிலுவையில் இல்லையென அறிக்கை பெறப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு ஏதும் இவருக்கு ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு இவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும் சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் மீதான தணிக்கைத் தடை இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி நிதி சம்மந்தப்பட்ட தணிக்கைத் தடைகளால் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன் பணம் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அதனை ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 31.07.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணை வழங்கபட்டது.

மன்றத் தீர்மானம் எண்.389/08, நாள்.30.07.2008ல் கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி பணி நியமனம் செய்ய மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, 02.09.2008 தேதியிட்ட செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ2/8286/08 ன்படி திரு.ப்பி. கருணாகரன் என்பவருக்கு கூடுதல் வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவரது பதவி உயர்வுக்கு அரசின் உறுதியாக்கம் கோரி அரசுக்கு 26.09.2008 தேதியிட்டு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசாணை எண்.145, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள்.31.03.2009ல் திரு. ப்பி. கருணாகரன் என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் இவரது பதவி உயர்வுக்கு உறுதியாக்கம் அளிப்பது குறித்து பின்னர் பரிசீலிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி 7–வது மண்டலத்திற்குட்பட்ட சத்தியம் திரையரங்கம் வளாகத்திலுள்ள திரையரங்கங்களுக்கு வரிமதிப்பீடு குறைபாடுகள் குறித்து திரு. ப்பி.கருணாகரன், என்பவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக இவரது ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்ய ஆணை வழங்கப்பட்டது. இவ்விபரம் அரசுக்கு தெரிவித்து இவருக்கு கூடுதல் வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு அரசின் உறுதியாக்கம் பெற தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, திரு. ப்பி. கருணாகரன், கூடுதல் வருவாய் அலுவலரை மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 31.7.2009 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி1/15160/2009**
**ஆணையாளர் அவர்களின் 25.08.2009 நாளிட்ட குறிப்பு**

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :324/2009 பொருள் எண்.16

**ஓய்வூதியம்**

பாலங்கள் துறையில் செயற்பொறியாளராக பணிபுரிந்த திரு. எம். ரங்கநாதன் அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையினை தொடர்ந்து அரசாணை நிலை எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.இ.4) நாள் 29.02.2008–ல் அன்னாருக்கு கட்டாய ஓய்வு அளித்தும், தண்டனையாக அன்னாருக்கு 75 விழுக்காடு பணிக்கொடை மற்றும் 75 விழுக்காடு ஓய்வூதியம் மட்டுமே தகுதியுடைய ஓய்வூதிய பயன்களாக அனுமதிக்க ஆணையிடப்பட்டதின் அடிப்படையில் ஆணையரது செயல்முறை ஆணை பொது.ந.க.எண்.பி4/16653/2008, நாள் 20.06.2008–ன்படி அன்னாருக்கு மேற்கண்டவாறு 75 விழுக்காடு ஓய்வூதியப்பயன்களில் தற்காலிக ஓய்வூதியமாக ரூ.5,000/–ம் தற்காலிக பணிக்கொடையாக ரூ.1,96,875/–ம் நீதிமன்ற அவமதிப்பினை தவிர்க்கும் பொருட்டு ஆணையரின் ஆணை பெற்று வழங்கப்பட்டது. தனியர் தற்காலிக ஓய்வூதியம் பெற்று வந்த நிலையில் 31.01.2009 அன்று காலமானார்.

காலஞ்சென்ற ஓய்வூதியரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி. ஆர். பார்வதி அவர்கள் அன்னாருக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கக்கோரி உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்துள்ளதால் அன்னாருக்கு குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியமாக ரூ.1,275/– 01.02.2009 முதல் வழங்க பாலங்கள் துறை குறிப்பு எண். பா.து.ந.க.எண்.பா2/943/2009, நாள் 11.06.2009 மூலம் ஆணையரின் ஆணை பெறப்பட்டுள்ளது.

எனவே, காலஞ்சென்ற ஓய்வூதியர் திரு. எம். ரங்கநாதன், செயற்பொறியாளர் அவர்கள் 2ம் நிலை அலுவலர் என்பதால் அன்னாருக்கு 01.08.2007 முதல் தற்காலிக ஓய்வூதியமாக ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) அன்னார் காலமான நாள் 31.01.2009 வரை வழங்கியமைக்கும், தற்காலிக பணிக்கொடை ரூ.1,96,875/– (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) வழங்கியமைக்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டியும், அன்னாரின் மனைவி திருமதி. ஆர். பார்வதி அவர்களுக்கு தற்காலிக குடும்ப ஓய்வூதியம் மாதம் ரூ.1,275/– (ரூபாய் ஆயிரத்து இருநூற்றி எழுபத்தி ஐந்து மட்டும்) 01.02.2009 முதல் வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ச.கு.ந.க.எண்.சி1/4231/2009**
**ஆணையாளர் அவர்களின் 25.08.2009 நாளிட்ட குறிப்பு**

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :325/2009 பொருள் எண்.17

**தகுதிகாண் பருவம்**

ஆணையாளரது செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.ஈ2/14285/2002, நாள் 15.06.2006–ன்படி திரு. சா. ஜேக்கப் ராஜன் பாபு, உதவி சட்ட அலுவலர் அரசின் உறதியாக்கத்திற்குட்பட்டு, சட்ட அலுவலராக பணிநியமனம் செய்யப்பட்டார். தனியர் 16.06.2006 முற்பகல் முதல் சட்ட அலுவராக பணியில் சேர்ந்தார்.

அரசாணை (ப) எண்.413, ந.நி.ம.கு.வ.துறை, நாள் 11.10.2006–ன்படி தனியரின் பணி நியமனம் உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளதையடுத்து ஆணையாளரின் செயல்முறை ஆணை, பொ.து.ந.க.எண்.ஈ2/142285/2002, நாள் 19.12.2006–ன்படி திரு. சா. ஜேக்கப் ராஜன் பாபு என்பவர் சட்ட அலுவலராக பணியேற்ற நாளான 16.06.2006 முற்பகல் முதல் பணி வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டது.

திரு. சா. ஜேக்கப் ராஜன் பாபு, என்பவர் சட்ட அலுவலர் பதவியில் திருப்திகரமாக இரண்டு ஆண்டுகள் பணி முடித்தமையால் சட்ட அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்க வேண்டும். அன்னார் வகித்து வரும் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 1–பி என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தகுந்த ஆணை பிறப்பிக்கும் அதிகாரத்தினை மன்றம் பெற்றுள்ளது.

திரு. சா. ஜேக்கப் ராஜன் பாபு என்பவர் சட்ட அலவலராக பணியில் சேர்ந்த நாளான 16.06.2006 முற்பகல் முதல் 15.06.2008 பிற்பகல் வரை இரண்டு ஆண்டுகளில் தற்செயல் விடுப்பு நீங்கலாக எத்தகைய விடுப்பும் துய்க்கவில்லை. எனவே, அன்னார் சட்ட அலுவலர் பதவியில் 15.06.2008 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக ஆணை வழங்கலாம். அன்னார் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் துறையிலோ அல்லது விழிப்புக் குழுமத்திலோ நிலுவையில் இல்லை.

எனவே, திரு. சா. ஜேக்கப் ராஜன் பாபு அவர்களை 15.06.2008 பிற்பகல் முதல் சட்ட அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ச.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ச.கு.ந.க.எண்.சி1/4197/2009**
**ஆணையாளர் அவர்களின் 25.08.2009 நாளிட்ட குறிப்பு**

## 30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :326/2009 பொருள் எண்.18

### தகுதிகாண் பருவம்

அரசாணை 4(ப) எண்.5, (மா.ந.3) ந.நி.ம.கு.வ.துறை, நாள் 03.11.2006 மற்றும் ஆணையாளரின் செயல்முறை ஆணை ச.கு.ந.க.எண்.சி1/2490/1998, நாள் 09.11.2006–ன்படி திரு. பா. இராஜசேகர் வகிக்கும் உதவி சட்ட அலுவலர் பணியிடத்தை கூடுதல் சட்ட அலுவலர் பணியிடமாக தனியர் பொருட்டு நிலை உயர்த்தி (Person Oriental Upgradation ) அவர் கூடுதல் சட்ட அலுவலராக பணிபுரியும் வரை இந்நிலையில் தொடரவும் அதன் பின்பு அப்பணியிடம் உதவி சட்ட அலுவலராக நிலை இறக்கம் (Downgrade ) செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், அப்பதவிக்கான உதிய விகிதம் ரூ.8000–275–13500 என்று நிர்ணயம் செய்தும், வகுப்பு 1–பி என்ற வகைப்பாடு செய்யப்பட்டு இதற்கு மன்றத் தீர்மானம் பெறப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடுதல் சட்ட அலுவலராக நியமித்து ஆணை வழங்கப்பட்டது. அன்னார் 10.11.2006 முற்பகல் முதல் கூடுதல் சட்ட அலுவலர் பணியில் சேர்ந்தார். அரசு ஆணைப்படி மன்றத் தீர்மான எண்.456/2006, நாள் 30.11.2006 வாயிலாக பெறப்பட்டது.

திரு. பா. இராஜசேகர் என்பவர் கூடுதல் சட்ட அலுவலர் பதவியில் திருப்திகரமாக இரண்டு ஆண்டுகள் பணி முடித்தமையால் கூடுதல் சட்ட அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்க வேண்டும். அன்னார் வகித்து வரும் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மேற்கண்ட அரசு ஆணைப்படி வகுப்பு 1–பி என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் தகுந்த ஆணை பிறப்பிக்கும் அதிகாரத்தினை மன்றம் பெற்றுள்ளது.

திரு. பா. இராஜசேகர் அவர்கள் கூடுதல் சட்ட அலுவலராக பணியில் சேர்ந்த நாளான 10.11.2006 முற்பகல் முதல் 09.11.2008 பிற்பகல் வரையான இரண்டு ஆண்டுகளில் தற்செயல் விடுப்பு நீங்கலாக எத்தகைய விடுப்பும் துய்க்கவில்லை. எனவே, தனியர் கூடுதல் சட்ட அலுவலர் பதவியில் 09.11.2008 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கலாம். தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் துறையிலோ அல்லது விழிப்புக் குழுமத்திலோ நிலுவையில் இல்லை.

எனவே, திரு. பா. இராஜசேகர் அவர்களை 09.11.2008 பிற்பகல் முதல் கூடுதல் சட்ட அலுவலர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ச.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :327/2009 பொருள் எண்.19

**பணிக்கு வராத காலத்தினை வரன்முறைப்படுத்த அனுமதி**

திரு. ஏ. காஜாமொகைதீன், அடிப்படை சுகாதார பணியாளர், சுகாதார பிரிவு, மண்டலம்–7 அவர்கள் கடந்த 09.03.1994 முதல் எந்தவித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்காக அன்னாருக்கு குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டது.

தனியர் தனது 26.05.2002 நாளிட்ட கடிதத்தில் 09.03.1994 முதல் தனக்கு மனநிலை பாதித்து உடல்நலம் சரியில்லாத நிலையில் மனநல மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வந்ததினால் மருத்துவ குழுமம் முன் ஆஜராக முடியவில்லை என்றும் தன் மனைவி படிப்பறிவு குறைவானவர் என்பதால் தாங்கள் அனுப்பிய உத்தரவை பெற்றுக் கொள்ள இயலவில்லை என்றும், தான் தற்போது உடல் ரீதியாகவும் நல்ல மனநிலையில் இருப்பதாலும் மீண்டும் தன்னை பணியில் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகளில் ஒன்று மட்டுமே நிரூபணமாகிறது என்றும் மற்ற மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகவில்லை என விசாரணை அலுவலர் குறிப்பிட்டுள்ளார்.

11 ஆண்டுகளுக்குப்பின் பணியில் அமர்த்தப்பட்ட தனியரின் ஓய்வு பெறும் தேதி 30.06.2007, விதிகளின்படி ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை அரசாணை 55–ன் படி வழங்க இயலாது. அவர் வகுப்பு–3 நிலையினைச் சேர்ந்தவர் அன்னார் அடிப்படை சுகாதாரப்பணியாளர் பதவியில் சாதாரண நிலையில் உள்ளார் (Ordinary Grade) எவ்வித பதவி உயர்வும் இல்லை.

அன்னார் 11–ஆண்டுகள் பணிக்கு வராததால் இதுகுறித்து அடிப்படைவிதி 18(2)ன் கீழ் அரசு முடிவு எடுக்க வேண்டியுள்ளதாலும் அன்னார் 30.06.2007–ல் ஓய்வு பெற உள்ளதால் தண்டனை வழங்க இயலாத நிலை உள்ளதால் இவ்வொழுங்கு நடவடிக்கை மீது இறுதி முடிவெடுக்க நியமனக்குழுவின் பின்னேற்பு ஆணைக்கு உட்பட்டு, தனியரின் பணிக்கு வராத காலமான (09.03.1994 முதல் 29.01.2005 வரை) 11 ஆண்டுகளுக்கு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதி முடிவிற்காக அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

08.01.2006 நாளிட்ட அரசு கடிதத்தில் திரு. ஏ. காஜாமொகைதீன், அடிப்படை சுகாதார பணியாளர் தற்போது பணியில் உள்ளதால் மேற்சொன்ன பணியாளர் மீதான சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4–ம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு துணைவிதிகள் 1983–ன் விதி 9(2)ன் கீழான ஒழுங்கு நடவடிக்கையில் ஒழுங்கு முறை அதிகாரி சென்னை மாநகராட்சி ஆணையர் என்பதால் அவரே மேற்சொன்ன விதிகளின்படி இறுதியாணை வெளியிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, அரசு கடிதத்தின் அடிப்படையில் திரு. ஏ. காஜாமொகைதீன், சுகாதார பணியாளர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக எச்சரிக்கை செய்யப்பட்டு, ஓய்வூதியம் மற்றும் இதர பணப்பயன்கள் வழங்கப்பட்டுள்ளது.

17.11.2007 நாளிட்ட துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களது கடிதத்தில் 09.03.1994 முதல் 29.04.2005 வரை பணிக்கு வராத காலத்தை ஊதியமில்லா விடுப்பாக வரண்முறைப்படுத்த அரசின் தளர்வாணை பெற வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, திரு. ஏ. காஜாமொகைதீன், அடிப்படை சுகாதார பணியாளர், சுகாதார பிரிவு, மண்டலம்–7 ஓய்வு நாள் 30.06.2007 அவர்கள் பணிக்காலத்தில் 11 ஆண்டுகள் சம்பளம் இல்லா விடுப்பில் இருந்தமைக்கு அக்காலத்தினை வரண்முறைப்படுத்த அரசின் தளர்வாணை பெற நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.5.ந.க.எண்.சி2/8791/2002

ஆணையாளர் அவர்களின் 24.08.2009 நாளிட்ட குறிப்பு

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :328/2009 பொருள் எண்.20

**பணிக்கு வராத காலத்தினை வரன்முறைப்படுத்த அனுமதி**

திரு. கே. கோவிந்தசாமி, (பணியாளர் எண்.520762) துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15, மண்டலம்–5 அவர்கள் 09.02.1998 முதல் 26.03.1999 வரை மற்றும் 02.06.1999 முதல் 18.10.2000 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை. எனவே, 09.02.1998 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்திற்காக குறிப்பாணை 20.02.1998, 26.04.1998 மற்றும் 26.05.1998 ஆகிய தேதிகளில் வழங்கி விளக்கம் கேட்கப்பட்டது. அதனை பெற்றுக் கொண்ட பணியாளர், தனது 07.02.1999 நாளிட்ட விளக்கத்தில் தனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் பணிக்கு வரமுடியவில்லை என்றும், உடல்நிலையை சரிபடுத்த நாட்டு மருந்து சாப்பிட சொந்த ஊரான ஆந்திர மாநிலம் விஜயவாடா தேல்ஸ்பூரில் தங்கி சரிப்படுத்தியதால் தன்னால் பணிக்கு வர இயலவில்லை என்றும் தன்னை மன்னித்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ள கோரியிருந்தார். பணியாளரின் விளக்கத்தின் பேரில் குற்றச்சாட்டுகளை நிலுவையில் வைத்து மீண்டும் பணியில் சேர உத்தரவிடப்பட்டது. அதன்படி பணியாளர் 27.03.1999 அன்று மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு பணிபுரிந்து வந்தார்.

மேலும், ஒழுங்கு நடவடிக்கை முடிவுபெறாத நிலையில் பணியாளர், மீண்டும் 02.06.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை என்பதால் 23.09.1999 அன்று குறிப்பாணை வழங்கி விளக்கம் கேட்கப்பட்டு விளக்கம் பெறப்பட்டது இவர் தனது 11.05.2000 நாளிட்ட விளக்கத்தில் தனக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு ரத்த வாந்தியும் காய்ச்சலும் ஏற்பட்டதால் தன்னால் பணிக்கு வரவில்லை என்றும், தற்போது உடல்நலம் சரியாகிவிட்டதால் மீண்டும் தன்னை மன்னித்து பணியில் சேர்த்துக் கொள்ள வேண்டியிருந்தார். அவரது விளக்கத்தின் பேரில் ஆணையரின் அனுமதி பெற்று மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டது. அதன்படி 19.10.2000 அன்று பணியில் சேர்ந்தார்.

எனவே, பணியாளர் மீது சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4ம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) துணை விதி 9(2)ன் கீழ் கீழ்கண்ட குற்றங்கள் சுமத்தி விளக்கம் கேட்கப்பட்டது.

1. தாங்கள் 09.02.1998 முதல் 26.03.1999 வரையிலும் மற்றும் 02.06.1999 முதல் 18.10.2000 வரையிலும் பணிக்கு வராமல் இருந்தது விதிகளை மீறிய செயலாகும்.
2. தாங்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருந்ததால் துப்புரவு பணி பாதிக்கப்பட்டு பொது மக்களுக்கு சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்தியுள்ளது.
3. அடிக்கடி முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் இருப்பதால் தங்களுக்கு பணியின் மீது அக்கறை இல்லை என்பதை புலப்படுத்துகின்றது.

மேற்கண்ட குற்றங்களுக்காக குற்றக்குறிப்பாணை பணியாளருக்கு சார்பு செய்யப்பட்டது. அதனை பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 26.04.2001 நாளிட்ட விளக்கத்தில் தான் 09.02.1998 முதல் 26.03.1999 வரையில் உடல் நலம் சரியில்லாமல் மருத்துவ ஆலோசனையின்படி வைத்தியம் பார்த்து வந்தேன் என்றும் மீண்டும் 02.06.1999 முதல் உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தேன் என்றும், ஆகையால் குறித்த நேரத்தில் விளக்கம் அளித்திட இயலவில்லை என்றும் தற்பொழுது உடல் நலம் சரியில்லாத காரணத்தினால் ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று உடல்நிலை தேறி வருகிறது என்றும், தான் தெரியாமல் செய்த தவறை மன்னித்து இக்குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவிக்குமாறும் மேலும் தனது உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்ந்து மருத்துவ சிகிச்சை பெற்று வருவதால் தனது விளக்கத்தை குறித்த நேரத்தில் அளித்திட இயலவில்லை என்றும் தன்னை மன்னித்திட கோரியுள்ளார்.

பணியாளருக்கு மேலும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அவரை விசாரணை செய்ய திரு.எல். கண்ணன், உதவி செயற்பொறியாளர், பகுதி–17 அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். அதன்படி பணியாளர், விசாரணைக்கு ஆஜராக 18.06.2001 அன்று கடிதம் அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை அலுவலர் தனது 10.08.2001 நாளிட்ட அறிக்கையில் தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது என அறிக்கை சமர்ப்பித்துள்ளார். விசாரணை அலுவலர் அறிக்கையின் நகல் பணியாளருக்கு சார்பு செய்யப்பட்டது. அதனை 06.10.2001 அன்று பெற்றுக் கொண்ட பணியாளர் தனது 04.04.2002

நாளிட்ட விளக்கத்தில் தான் வேலைக்கு வராத நாட்களில் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்துக் கொண்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தேன் என்றும் பணிக்கு வராததற்கு கடிதம் கொடுக்க இயலவில்லை என்றும் தான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததற்கான ஆவணங்களின் நகல்களை சமர்ப்பித்துள்ளார். மருத்துவமனை சான்றுகளை ஆய்வு செய்ததில் தனியர் பணிக்கு வராத காலத்தில் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான ஆதாரம் இல்லை.

தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் நிரூபணமானதாக விசாரணையில் தெரியவந்ததை தொடர்ந்து திரு. கோவிந்தசாமி, துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15, மண்டலம்–5 அவர்கள் 09.02.1998 முதல் 26.03.1999 வரை மற்றும் 02.06.1999 முதல் 18.10.2000 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக ஊதிய உயர்வினை இரண்டு ஆண்டு காலத்திற்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்தும் பணியாளர் பணிக்கு வராத காலமான 09.02.1998 முதல் 26.03.1999 வரை மற்றும் 02.06.1999 முதல் 18.10.2000 வரை சம்பளமில்லா விடுப்பாக வரன்முறைப்படுத்தியும் செயல்முறை ஆணை ம.அ.5.ந.க.எண்.சி2/1195/1999, நாள் 01.09.2003 மூலம் ஆணை வழங்கப்பட்டது.

ஆனால் செயல்முறை ஆணை ம.அ.5.ந.க.எண்.சி2/1195/1999, நாள் 09.07.2008–ன்படி திரு. கே. கோவிந்தசாமி, துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15 அவர்கள் 09.02.1998 முதல் 26.03.1999 வரை மற்றும் 02.06.1999 முதல் 18.10.2000 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத குற்றத்திற்காக அன்னாரின் ஊதிய உயர்வினை இரண்டாண்டு காலத்திற்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் செய்தும் பணிக்கு வராத காலத்தினை சம்பளமில்லா விடுப்பாக வரன்முறைப்படுத்தியும் வழங்கப்பட்ட செயல்முறை ஆணையை தனியருக்கு வழங்குவதற்குள் 17.12.2002 அன்று காலமாகிவிட்டபடியால், அச்செயல்முறை ஆணையை ரத்து செய்து 28.08.2003 மற்றும் 01.09.2003 நாளிட்ட உத்தரவின்படி தனியர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு கைவிடவும் விதிகளின்படி அடிப்படைவிதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வரன்முறைப்படுத்தவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியர் பணிக்கு வராத காலமான 09.02.1998 முதல் 26.03.1999 வரை மற்றும் 02.06.1999 முதல் 18.10.2000 வரை பணிக்கு வராத காலம் ஓராண்டிற்கு மேற்படுவதால் அடிப்படைவிதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

எனவே, திரு. கே. கோவிந்தசாமி, துப்புரவு பணியாளர், கோட்டம்–75, பகுதி–15, (காலமான நாள் 17.12.2002) அவர்களின் 09.02.1998 முதல் 26.03.1999 வரை மற்றும் 02.06.1999 முதல் 18.10.2000 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் ஓராண்டிற்கு மேற்படுவதால் அடிப்படைவிதி 18(2)ஐ தளர்வு செய்ய அரசுக்கு முன்மொழிவு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.9.ந.க.எண்.அ6/4790/1998**
**ஆணையாளர் அவர்களின் 06.08.2009 நாளிட்ட குறிப்பு**

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :329/2009 பொருள் எண்.21

**பணிக்கு வராத காலத்தினை வரன்முறைப்படுத்த அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–9, பகுதி–25ல் பணிபுரியும் தற்காலிக துப்புரவு பணியாளராக 06.01.1998 முதல் பணிநிரந்தரம் செய்யப்பட்ட திரு. கே. ரவி, பணி எண்.742395 என்பவர் 12.05.1998 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத செயலுக்காக 04.06.1998 மற்றும் 25.06.1998 நாளிட்ட குறிப்பாணைகளின் மூலம் விளக்கம் கோரியும் எவ்வித விளக்கமும் சமர்ப்பிக்காததால் சென்னை மாநகராட்சி மூன்றாம் (மற்றும்) நான்காம் நிலைப் பணியாளர்கள் (ஒழுங்கு (மற்றும்) மேல்முறையீடு) துணைவிதி 9(2)ன் கீழ் பின்வரும் நான்கு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு 16.12.1998 நாளிட்ட குற்ற குறிப்பாணை வாயிலாக விளக்கம் கோரப்பட்டது.

குற்றச்சாட்டு:–
1. 12.05.1998 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2. முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் குறிப்பாணை அனுப்பப்பட்டு விளக்கம் கேட்டதற்கு இதுநாள் வரை விளக்கம் அனுப்பி வைக்கப்படவில்லை.
3. துப்புரவு பணிக்கு வராமல் இடையூறு விளைவித்திருப்பது.
4. அலுவலக நடைமுறைகளை அலட்சியப்படுத்துவது.

மேற்கண்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணை தனியருக்கு சார்வு செய்து விளக்கம் பெறப்பட்டது. தன் விளக்கத்தில் பணியாளர் தான் கடந்த 12.05.1998 முதல் பணிக்கு வரமுடியவில்லை என்றும் தன்னுடைய தாயார் ஆந்திராவில் இருக்கிற காரணத்தால் தன்னுடைய தாயார் உடல்நிலை பாதிக்கப்பட்டு உள்ளதால் தான் ஊருக்கு செல்ல வேண்டியதால் தன்னுடைய தாயார் உடல்நிலை சரிசெய்து சென்னைக்கு கொண்டுவர வேண்டியதால் தான் எந்தவித முன்னறிவிப்புமின்றி ஊருக்கு சென்றதற்கு மன்னித்து அய்யா இந்த முறை தன் மீது கருணை வைத்து தன்னை மீண்டும் கோட்டம்–136ல் பணியில் சேர்த்துக் கொள்ளுமாறு வேண்டினார். தனியர் அளித்த விளக்கத்தின்பேரில் மீண்டும் 13.03.1999 முதல் பணியில்சேர அனுமதிக்கப்பட்டார். தனியர் மீண்டும் 02.06.1999 முதல் பணிக்கு வரவில்லை.

பணியாளர் மீதான ஒழுங்கு நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு தனியர் மீது நேர்முக விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின்போது தனியர் நேர்முக விசாரணையில் பங்கேற்காததால் தனியர் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாவதாக விசாரணை அலவலரின் 13.10.1999 நாளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. விசாரணை அலுவலரின் அறிக்கை நகல் தனியருக்கு சார்வு செய்யப்பட்டு அதன்மீது தனியரின் 17.12.1999 நாளிட்ட கூடுதல் விளக்கம் பெறப்பட்டது. அதில் தன் குடும்ப சூழ்நிலைக் காரணமாக 02.06.1999 முதல் தான் மன உளைச்சலால் பாதிக்கப்பட்டிருந்ததால் நேர்முக விசாரணைக்கு ஆஜராக முடியவில்லை. இந்த முறை மன்னித்து மீண்டும் நேர்முகவிசாரணைக்கு என்னை அனுமதித்ததால் தவறாமல் விசாரணைக்கு ஆஜராக கடமைப்பட்டிருப்பேன். தற்போது நான் குணமடைந்து நல்ல நிலையில் இருக்கிறேன். நாள் 02.06.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு உ.செ.பொ.ப.25/1521/99, 10.06.1999 நாளிட்ட குறிப்பாணை மற்றும் மண்டலம்–9 உ.செ.பொ.ப.25/1521, 08.09.1999 நாளிட்ட மீண்டும் ஒரு குறிப்பாணை நேரில் எனக்கு சார்வு செய்யப்பட்டது. மன உளைச்சல் பாதிக்கப்பட்டதின் காரணமாக தன்னால் பணிக்கு வர முடியவில்லை தாங்கள் அளித்த குறிப்பாணைக்கு பதில் கொடுக்க முடியவில்லை எனத் தெரிவித்ததை தொடர்ந்து தனியரை மீண்டும் பணியில் சேரவும், உத்தேச முடிவாக இரண்டு ஆண்டுகளுக்கு திரண்டபயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டது. இதன்படி தனியர் 02.04.2000 அன்று மீண்டும் பணியில் சேர்ந்தார்.

இந்நிலையில் தனியர் மீண்டும் 04.04.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் 11.04.2000 நாளிட்ட விளக்கம் கோரும் குறிப்பாணை வழங்கப்பட்டு தனியரின் 16.11.2000 நாளிட்ட விளக்கம் பெறப்பட்டது. தனியர் விளக்கம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில்சேர அனுமதிக்கப்பட்டு 19.01.2001 அன்று பணியில் சேர்ந்தார். மேற்கண்ட நிகழ்வுகளுக்காக அன்னார் மீது பின்வரும் கூடுதல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் கோரப்பட்டது.

குற்றச்சாட்டு:–
1. 12.05.1998 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2. முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் குறிப்பாணை அனுப்பப்பட்டு விளக்கம் கேட்டதற்கு இதுநாள் வரை விளக்கம் அனுப்பி வைக்கப்படவில்லை.
3. துப்புரவு பணிக்கு வராமல் இடையூறு விளைவித்திருப்பது.
4. 02.06.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது.
5. மீண்டும் 04.04.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால் துப்புரவு பணிக்கு இடையூறு நிர்வாகச் சிக்கல் ஏற்படக் காரணமாக இருந்தது.

**ம.அ.9.ந.க.எண்.அ6/4790/1998**

கூடுதல் குற்றச்சாட்டுக் குறிப்பாணை தனியருக்கு சார்வு செய்யப்பட்டு பணியாளர் 22.06.2001 அன்று கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

1. எனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் 12.05.1998 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரமுடியவில்லை.
2. நான் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்ததால் என்னால் குறித்த நேரத்தில் குறிப்பாணைக்கு விளக்கம் சமர்ப்பிக்க முடியவில்லை.
3. நான் இனிவரும் காலத்தில் துப்புரவு பணிக்கு இடையூறு விளைவிக்கமாட்டேன். இனிவரும் காலங்களில் நல்ல முறையில் பணி செய்வேன் என உறுதியளிக்கிறேன்.
4. 02.06.1999 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து என் உடல்நிலை சரியில்லாததாலும் மன உளைச்சலாலும் என்னால் பணிக்கு வரமுடியவில்லை.
5. மீண்டும் 04.04.2000 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து மேலும் உடல்நிலை மிகவும் சரியில்லாததால் பணிக்கு வரமுடியவில்லை. நான் இனிவரும் காலங்களில் துப்புரவு பணிக்கு இடையூறு செய்யமாட்டேன், என்றும் நிர்வாக சிக்கலை ஏற்படுத்த மாட்டேன் என உறுதியளிக்கிறேன். ஆகவே என்னை மன்னித்து குற்றச்சாட்டுகளிலிருந்து விலக்கு அளிக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு நேர்முக விசாரணை மேற்கொள்ள விசாரணை அலுவலர் நியமனம் செய்து தனியர் மீது நேர்முக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை அலுவலர் அவர்கள் 06.11.2001 அன்று பணியாளர் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தனியர் மீண்டும் 30.08.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்குவராததால் துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் பெறப்பட்டது. தனியரின் விளக்கத்தினைத் தொடர்ந்து ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில்சேர அனுமதிக்கப்பட்டு 01.01.2004 முதல் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

திரு. கே. ரவி, துப்புரவு பணியாளர் அவர்கள் முன்னறிவிப்பின்றி பணிக்குவராத மேற்கண்ட நான்குநிகழ்வுகளும் ஒருங்கிணைத்து தண்டனையாக மூன்று ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி தனியரின் ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்தும் தனியர் பணிக்கு வராத காலங்களை தகுதியுள்ள விடுப்பாக பாவித்தும் 27.02.2004 நாளிட்ட இறுதி ஆணை வழங்கப்பட்டது.

திரு. கே. ரவி, துப்புரவு பணியாளர் 06.01.1998 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டு 5 ஆண்டுகள் பூர்த்தியடையாத நிலையில் பணிக்குவராத 12.05.1998 முதல் 12.03.1999 வரை, 02.06.1999 முதல் 01.04.2000 வரை 04.04.2000 முதல் 18.01.2001 வரை மற்றும் 30.08.2001 முதல் 31.12.2003 ஆகிய நான்கு நிகழ்வுகளிலும் அடிப்படை விதி 18(1)ஐ தளர்த்தி அரசாணை பெறாமல் தகுதியுள்ள விடுப்பாக வரன்முறைப்படுத்தியதற்கு அரசின் தளர்வாணை பெற அரசுக்கு முன்மொழிவு அனுப்பிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ.5.ந.க.எண்.எச்1/3062/2008**
**ஆணையாளர் அவர்களின் 18.08.2009 நாளிட்ட குறிப்பு**

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :330/2009 பொருள் எண்.22

**கணக்கு தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு**

டாக்டர் மாலதி ஜெசிந்தா ஜெயக்குமார், மருத்துவ அலுவலர் / மண்டலம்–5 என்பவர் கடந்த 31.10.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றார்.

அன்னாரின் பணிப்பதிவேடு உள்ளாட்சி நிதித் தணிக்கைக்கு முன்மொழிவு பொருட்டு அனுப்பப்பட்டதில், ஓய்வு பெற்ற இம்மருத்துவ அலுவலர் சார் நிலை கணக்கு தேர்ச்சி பெற வேண்டுமென்றும், அங்ஙனம் தேர்ச்சி பெறவில்லையெனில் அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் மாலதி ஜெசிந்தா ஜெயக்குமார் ஓய்வு பெற்ற மருத்துவ அலுவலர் கணக்கு தேர்வில் தேர்ச்சி அடையவில்லை.

ஓய்வு பெற்ற இம்மருத்துவ அலுவலர் 24.10.2008 நாளிட்ட கடிதத்தில் தான் மே 2008 ஆம் மாதம் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி அடைந்துள்ளதாகவும், ஆனால் கணக்கு தேர்வில் தேர்ச்சி அடைய முடியவில்லையென்று கூறியுள்ளார்.

டாக்டர் மாலதி ஜெசிந்தா ஜெயக்குமார், சென்னை மாநகராட்சியில் 31.05.1979 அன்று மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்து 31.10.2008 அன்று வரை பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். வரையறக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி இவர் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். ஆனால் இவர் அத்தேர்வில் தேர்ச்சி பெறவில்லை.

31.10.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றுள்ள டாக்டர் மாலதி ஜெசிந்தா ஜெயக்குமார் என்பவருக்கு கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க அரசின் தளர்வாணை பெற வேண்டும்.

எனவே, 31.10.2008 அன்று வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்ற டாக்டர் மாலதி ஜெசிந்தா ஜெயக்குமார், மருத்துவ அலுவலர் / மண்டலம்–5 என்பவருக்கு கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்க அரசின் தளர்வாணை பெறும் பொருட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.5.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :331/2009 பொருள் எண்.23

**அயற்பணி நீட்டிப்பு**

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, ஆணையரது செயல்முறை ஆணை, செ.மு.ஆ.எண்.அ4/20673/2005, நாள் 30.08.2005 மற்றும் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை ஆணையர் (பொ) அவர்களது செயல்முறை ஆணை செ.மு.ஆ.எண்.அ1/19001/2007, நாள் 18.01.2008–ன்படி திரு. எச்.ஏ. அமானுல்லாஉற், (தோட்டக்கலை உதவி இயக்குநர்) அவர்கள் சென்னை மாநகராட்சியில் 14.09.2005 முதல் பூங்கா கண்காணிப்பாளர் (தெற்கு) ஆக அயற்பணியில் பணிபுரிந்து வருகிறார்.

திரு. எச்.ஏ. அமானுல்லாஉற், (தோட்டக்கலை உதவி இயக்குநர்) பூங்கா கண்காணிப்பாளர், சென்னை மாநகராட்சி என்பவரின் அயற்பணிக்காலம் 13.09.2008 உடன் மூன்றாண்டுகள் முடிவடைகிறது. மீண்டும் 14.09.2008 முதல் மேலும் ஒராண்டிற்கு அயற்பணியினை நீட்டிக்க மன்றத்தின் அனுமதி பெற்று ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறைக்கு பிரேரணை அனுப்பப்பட்டு ஆணை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் திரு. எச்.ஏ. அமானுல்லாஉற், (தோட்டக்கலை உதவி இயக்குநர்) பூங்கா கண்காணிப்பாளர், சென்னை மாநகராட்சி அவர்களின் 29.05.2009 நாளிட்ட கடிதத்தில் சிறப்பு நிகழ்வாக கருதி தனது அயற்பணியினை 14.09.2009 முதல் மேலும் ஒராண்டிற்கு (ஐந்தாம் ஆண்டு) நீட்டிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஆகவே, திரு. எச்.ஏ. அமானுல்லாஉற், (தோட்டக்கலை உதவி இயக்குநர்) பூங்கா கண்காணிப்பாளருக்கு சிறப்பு நிகழ்வாக கருதி அடிப்படை விதி 110 (4) (ii)ஐ தளர்வு செய்து அவரது அயற்பணி காலத்தை மீண்டும் ஒராண்டுக்கு நீட்டிப்பது தொடர்பாக ஆணையர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறைக்கு மன்றத்தின் பின்னேற்பாணைக்குட்பட்டு செயற்குறிப்பு அனுப்பியதற்கு மன்றத்தின் பின்னேற்பாணை வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>சு.து.ந.க.எண்.சி1/1774/2009</u>
<u>ஆணையாளர் அவர்களின் 18.8.2009 நாளிட்ட குறிப்பு</u>

## 30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :332/2009 பொருள் எண்.24

### வெளிநாடு செல்ல அனுமதித்தமைக்கு பின்னேற்பு

டாக்டர். எஸ். கிருஷ்ணா கூடுதல் சுகாதார அலுவலர் சென்னை மாநகராட்சி என்பவர் வெளிநாடு (அமெரிக்கா)வில் வசிக்கும் அவரது மகளும், மருமகனும் அமெரிக்காவிற்கு வரும்படி அழைப்பு விடுத்துள்ளதால் ஜுலை 2009–ல் வெளிநாடு (அமெரிக்கா) செல்ல கடவுச் சீட்டு பெற விண்ணப்பிக்க தடையின்மை சான்றிதழ் வழங்க கோரி 20.03.2009 நாளிட்ட கடிதத்தினை சமர்ப்பித்துள்ளார்.

டாக்டர். எஸ். கிருஷ்ணா கூடுதல் சுகாதார அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் 16.07.1987–ல் உதவி சுகாதார அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரது பணி நியமனம் தொடர்பாக அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு 03.05.1999 முதல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு 28.05.1992 முற்பகல் முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். மேலும் இவருக்கு 14.11.2008 முதல் கூடுதல் சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. கூடுதல் சுகாதார அலுவலராக பதவி உயர்வு அளித்ததற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு இவருக்கு கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் பணிவரன் முறைப்படுத்த கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

மேலும் இயக்குநர் விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை சென்னை–28 அவர்களின் 28.04.2009 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார். காவல் துறை கண்காணிப்பாளர் மத்திய பாதுகாப்பு பிரிவு மத்திய புலனாய்வுத்துறை சென்னை–2 அவர்களின் 17.04.2009 நாளிட்ட கடிதத்தில் தனியர் கடவுச் சீட்டு பெற விண்ணப்பிக்க தடை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார். விழிப்பு அலுவலர் சென்னை மாநகராட்சி அவர்களின் 25.05.2009 நாளிட்ட கடிதத்தில் விழிப்புத்துறையில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார். மேலும் தனியர் வெளிநாடு (அமெரிக்கா) சென்று வர ஆகும் செலவினத்தை இவரது சொந்த சேமிப்பிலிருந்து ஈடுசெய்வதாக தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் கூடுதல் சுகாதார அலுவலர் பதவி வகுப்பு 1B-ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் டாக்டர். எஸ். கிருஷ்ணா கூடுதல் சுகாதார அலுவலர் என்பவர் வெளிநாடு (அமெரிக்கா) பயணம் மேற்கொள்ள கடவுச்சீட்டு பெற விண்ணப்பிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். போதிய கால அவகாசம் இல்லாததால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டும் தனியர் வெளிநாடு (அமெரிக்கா) பயணம் மேற்கொள்ள கடவுச்சீட்டு பெற விண்ணப்பிக்க ஆணையரது செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/1774/09 நாள்.31.07.09 ன் வாயிலாக தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

1) வெளிநாடு செல்ல கடவுச்சீட்டு பெற விண்ணப்பிக்க தடையின்மை சான்றிதழ் கோரும் இவர் வெளிநாட்டில் தங்கும் போது வேலைவாய்ப்பை எற்கவோ அல்லது படிக்கவோ மற்றும் பியிற்சியிலோ கலந்துக் கொள்ளக் கூடாது.
2) வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக்கூடாது.
3) வெளிநாடு செல்லும் பயண செலவு உள்பட எவ்வித தொகையையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
4) அவர் வெளிநாட்டில் இருக்கும் போது அவர் சென்னை மாநகராட்சி பணியினை துறக்க விண்ணப்பிக்கக் கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5) வழங்கப்படும் தடையின்மை சான்றிதழை பயன்படுத்தி ஆணையாளர் அவர்களின் முன் அனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணம் எதுவும் மேற்கொள்ளக்கூடாது.
6) இவ்வாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறுமாதத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது
7) வெளிநாடு செல்லும் முன் உரிய விடுப்பு அனுமதி பெற்று வெளிநாடு செல்ல வேண்டும் அவ்விடுப்பு ஆறுமாதத்திற்கு மிகையாகக் கூடாது.
8) இத்தடையின்மைச் சான்று அமெரிக்கா செல்ல மட்டுமே செல்லத்தக்கது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.ஈ4/41199/2002**
**ஆணையர் அவர்களின் 16.09.2009 நாளிட்ட குறிப்பு**

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :333/2009 பொருள் எண்.25

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சி தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர்களால் அரசு மற்றும் சென்னை மாநகராட்சிக்கு எதிராக தொடுத்திருந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தனது 23.04.2008 நாளிட்ட தீர்ப்பில் மனுதாரர்களின் கோரிக்கையினை அரசாணை நிலை எண்.22, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 28.02.2006ன் அடிப்படையில் பரிசீலித்து நான்கு வாரக்காலத்திற்குள் தக்க ஆணையினை பிறப்பிக்குமாறு ஆணையிட்டுள்ளது.

நீதிப்பேராணை எண்.22100/2007ன்படி வழக்கு தொடர்ந்துள்ள 46 நபர்களின் பெயர்கள் ஏற்கனவே 274 நபர்களின் பணியை நிரந்தரம் செய்யக் கோரி அரசுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் இணைப்பு II, III மற்றும் Vல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 46 நபர்களில் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்த 32 நபர்கள் தவிர மண்டலம் மற்றும் துறைகளிலிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் மேலும் 27 நபர்களையும் சேர்த்து 59 நபர்களின் விவரம் கொண்ட பட்டியல் மன்றத்தின் தீர்மானம் பெற்று (எண்.682/08)ன்படி மேற்படி நபர்களின் பணியை வரன்முறைப்படுத்த அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டது. அரசாணை எண். 144, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள் 12.08.2009 ன்படி 59 தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர்களின் பணியை ரூ.5200–20200+2800 (தர ஊதியம்) காலமுறை ஊதிய விகிதத்தில் தற்காலிக தொழில் நுட்ப உதவியாளர்களாக வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வழக்கு தொடர்ந்த 46 நபர்களில் மீதமுள்ள 14 நபர்களில் (46–32=14) மூவர் மட்டுமே (ஐ.டி.ஐ.) சான்று பெற்றுள்ளனர். அதிலும் ஒருவர் அதாவது, திரு.ஏ. முகமது ரபி என்பவர் தற்போது பணியில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இருவரை தவிர்த்து வேறு எவரும் மண்டலங்களிலோ துறைகளிலோ பணியாற்றுகின்றனரா என்ற விபரம் கோரப்பட்டதில் மேலும் 6 நபர்களின் பெயர் பட்டியல் பெறப்பட்டது. பெறப்பட்டுள்ள விபரங்களின்படி இந்த 6 நபர்களும் ஐ.டி.ஐ. (சிவில்) கல்வித்தகுதி பெற்றுள்ளனர். எனவே முதலில் உள்ள 2 நபர்களுடன் தற்போது பெறப்பட்டுள்ள விவரங்களின்படி 6 நபர்களையும் சேர்த்து கீழ்கண்ட 8 நபர்கள் ஐ.டி.ஐ (சிவில்) சான்று பெற்று 1.3.2009 அன்று 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளனர்.

| வ. எண் | பெயர் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | கல்வித் தகுதி | பணிபுரியும் இடம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஜே. மாதவி | 19.05.72 | 16.02.96 | ஐ.டி.ஐ | கட்டடத்துறை |
| 2 | ஏ. புவனேஸ்வரி (எ) ஏ.ஏ. பங்கஜா | 03.05.74 | 16.04.96 | ஐ.டி.ஐ | கட்டடத்துறை |
| 3 | எம். பிரியா சரோஜினி | 18.12.75 | 24.09.97 | ஐ.டி.ஐ | கட்டடத்துறை |
| 4 | ஆர். நளினி | 13.10.69 | 25.02.98 | ஐ.டி.ஐ | கட்டடத்துறை |
| 5 | பி. செல்வகுமாரி | 05.04.73 | 16.04.98 | ஐ.டி.ஐ | மண்டலம்–4 |
| 6 | எஸ்.மீனா | 30.09.76 | 20.05.98 | ஐ.டி.ஐ | கட்டடத்துறை |
| 7 | எம். அமல்ராஜ் | 06.05.70 | 20.05.98 | ஐ.டி.ஐ | பேருந்து சாலைத் துறை |
| 8 | யு. ரீட்டா ஜெயகுமாரி | 10.05.64 | 16.02.99 | ஐ.டி.ஐ | கட்டடத்துறை |

சென்னை மநாகராட்சி பொறியியல் துணை விதிகள் 1981ன்படி உதவி வரைவாளர் (சிவில்) பதவிக்கு கல்வித்தகுதி (DME & DCE) அதாவது டிப்ளமா இன் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் மற்றும் டிப்ளமா இன் சிவில் இன்ஜினியரிங் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, ஐ.டி.ஐ. சான்று பெற்ற இவர்களை உதவி வரைவாளர் (சிவில்) பதவியில் நியமனம் செய்ய விதிகளில் இடமில்லை.

மேலும் சென்னை மாநகராட்சி பொறியியல் துணை விதிகள் 1981ன்படி உதவி வரைவாளர் (மின்சாரம்) பதவிக்கு கல்வித்தகுதி ஐ.டி.ஐ. என்றாலும் தற்போது மின்சாரத்துறையில் உதவி வரைவாளர் (மின்சாரம்) என்ற பதவியே சென்னை மாநகராட்சியில் இல்லாதக் காரணத்தால் மேலே சொல்லப்பட்ட இந்த 8 நபர்களை உதவி வரைவாளர்களாக பணி வரன்முறைப்படுத்த இடமில்லை.

மேற்குறிய இந்த எட்டு தற்காலிக தொழில் நுட்ப உதவியாளர்கள் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியுள்ளனர். அவர்களின் பணியை வரன்முறைப்படுத்த கோரியுள்ளனர். திரு. எம். அமல்ராஜ், செல்வி.ஏ.ஏ. பங்கஜா (தற்போது பணியில் இல்லை) மற்றும் திரு. முகமது ரபி (தற்போது பணியில் இல்லை) ஆகிய மூவரும் மேலும் 46 நபர்களுடன் கூடி நீதிபேராணை மனு எண்.22100/2007ன்படி தங்களுடைய பணியை வரன்முறைப்படுத்திட வழக்கு தொடர்ந்துள்ளனர். சென்னை உயர்நீதிமன்றம் தனது 23.04.2008 நாளிட்ட தீர்ப்பில் 12.09.2006 நாளிட்டு அரசுக்கு அனுப்பப்பட்ட, இவ்வலுவலகப் பிரேரணையின் அடிப்படையில் அரசாணை பல்வகை எண்.22, நாள் 28.02.2006ன்படி நான்கு வார காலத்திற்குள் ஆணை பிறப்பிக்க வேண்டும்

என்று ஆணையிட்டுள்ளது. ஆனால் இந்த இரண்டு தற்காலிக தொழில் நுட்ப உதவியாளர்களும் அரசாணை 22ன்படி 01.01.2006 அன்று 10 ஆண்டு பணி நிறைவு செய்யாமல் அதற்கு பின்னர் தான் 10 ஆண்டு பணி நிறை செய்துவிட்டபடியால் இவர்களது கோரிக்கையை பரிசிலனை செய்து இவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில் இவர்களை தொழில் நுட்ப உதவியாளர்கள் (நிலை–2) (Technical Assistants - Grade-2) என சிறப்பு நிகழ்வாக ஈர்த்துக் கொள்ளலாம் என்றாலும் அப்பதவிக்கு உண்டான தகுதி பெறாத நிலையில், இவர்களை ஏதாவது ஒரு நிரந்தரப் பணியில் ஈர்த்துக்கொள்ள இவர்களின் கல்வித்தகுதியை அடிப்படையாக கொண்ட பதவிகள் ஏதும் பொறியியல் துறைகளில் அமைந்திராத காரணத்தினால் அவர்களை முறையாக பணியமர்த்துவதற்கு ஏதுவாக சென்னை மாநகராட்சி மூன்றாம் நிலையில் அமைச்சுப் பணி பதவியில் குறைந்தபட்ச ஊதிய விகிதமான ரூ. 2610–65–3150–65–3540 என்ற ஊதிய விதிகத்தில் இந்த எட்டு (தற்போது ஏழு) தொழில்நுட்ப உதவியாளர்களை பதிவுரு எழுத்தர்களாக சிறப்பு நிகழ்வாக ஈர்த்துக்கொள்ள முடிவெடுக்கப்பட்டு, இத்தனியர்களின் கல்வித் தகுதி மற்றும் இதர தகுதிகளை மீண்டும் பரிசீலனை செய்ய நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர். நேர்காணலுக்கு ஐ.டி.ஐ சான்று பெற்ற எட்டு தொழில் நுட்ப உதவியாளர்களும் ஆஜரானார்கள். அவர்களின் அனைத்து சான்றுகளையும் நகலெடுத்து அரசு பதிவுப்பெற்ற உரிய சான்றாளரின் சான்றொப்பம் பெற்று அடையாளச் சான்றுடன் சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டார்கள். வரிசை எண்.2ல் உள்ள செல்வி. எ. புவனேஸ்வரி (எ) ஏ.ஏ. பங்கஜா தவிர மற்ற ஏழு தொழில் நுட்ப உதவியாளர்களும் அவர்களின் சான்றுகளை அறிவுறுத்தியவாறு சமர்ப்பித்துள்ளனர். அமைச்சுப் பணியில் மூன்றாம் நிலையில் நுழைவு பதவியில் (Entry level post) துவக்க பணியான பதிவுரு எழுத்தர் பதவிக்கு குறைந்த பட்ச கல்வித் தகுதியான பள்ளி இறுதி தேர்வான இரண்டு நபர்கள் 10ஆம் வகுப்பும் மற்றும் ஐந்து நபர்கள் (10+2) 12ஆம் வகுப்பும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

செல்வி. எ. புவனேஸ்வரி (எ) ஏ.ஏ. பங்கஜா 15.11.2008 வரை பணிபுரிந்து அதற்கு பின் தற்போது பணியில் இல்லையென துறைத் தலைவரான மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) அவர்கள் தெரிவித்துள்ளார். மற்ற ஏழு தற்காலிக தொழில் நுட்ப உதவியாளர்களும் தொடர்ந்து பணியில் இருப்பதாக சம்பந்தப்பட்ட துறைத் தலைவர், மண்டல அலுவலர்கள் தெரிவித்துள்ளார். ஆகையால் அனைத்து சான்றுகளையும் சமர்பித்துள்ள ஐ.டி.ஐ. சான்று பெற்ற ஏழு தொழில் நுட்ப உதவியாளர்களை மட்டும் நிரந்தரப் பணியில் பதிவுரு எழுத்தர்களாக ஈர்த்துக் கொள்ள அரசின் ஆணை பெறப்பட வேண்டும். இது தவிர, சான்றுகளை சமர்ப்பிக்காத செல்வி. எ. புவனேஸ்வரி (எ) ஏ.ஏ. பங்கஜா (வரிசை எண்.2) அவர்கள் தற்போது பணியில் இல்லாத காரணத்தால் அவருடைய பெயரை மட்டும் தவிர்த்து மீதமுள்ள ஏழு தற்காலிக தொழில் நுட்ப உதவியாளர்களை பதிவுரு எழுத்தராக பணியில் ஈர்த்துக் கொள்ளவும், இவர்களை வேலை வாய்ப்பகம் மூலம் தேர்வு செய்யப்படாமைக்கு தளர்வும், வயது வரம்புக்கு தளர்வும் மற்றும் இனச்சுழற்சி முறையை பின்பற்றாமைக்கு தளர்வாணையும் பெற்று தர அரசுக்கு கருத்துரு அனுப்பும் பொருட்டு நியமனக்குழு மூலமாக மாமன்றத்திற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.ஈ3/24331/2009
ஆணையாளர் அவர்களின் 26.08.2009 நாளிட்ட குறிப்பு

**30.09.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :334/2009 பொருள் எண்.26

**உதவி ஆணையாளர் (பொ.நி.ம.ப.) பணியேற்ற விவரம்**

திருமதி. எப். இன்னசென்ட் திவ்யா, மாவட்ட வருவாய் அலுவலர் (முத்திரைத்தாள்) அவர்கள் அரசாணை எண்.2822, பொது (சிறப்பு—அ) துறை, நாள் 14.07.2009—ன்படி, சென்னை மாநகராட்சியில் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) ஆக 31.07.2009 பிற்பகல் முதல் பணியேற்ற விவரம் மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்